සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Maths

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	**கணிதம்**

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. சிறிய சதுரமொன்றின் பரப்பளவு $1cm^2$ எனின், கீழே தரப்பட்டுள்ள உருவின் பரப்பளவைக் காண்க.



02. வெற்றிடங்களை பூரணப்படுத்துக.

$$\square = 16 = 2$$

03.  வரவுக்குறியினால் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கை யாது?

04. 5 புத்தகங்களின் விலை ரூபா 600 ஆகும். 15 புத்தகங்களின் விலை யாது?

05. கீழே தரப்பட்ட விகிதத்திற்கு சமவலு விகிதங்கள் 2 எழுதுக.

16 : 24

..... : .....

..... : .....

06. $x = 7$ ஆகும் போது கீழே தரப்பட்ட அட்சர கணித கோவையின் பெறுமானம் யாது?

$15 - x$

07. கீழே தரப்பட்ட எண் சோடியில் பெரிய எண்ணைத் தெரிவு செய்க.

4.02 , 4.20

08. கீழே எண் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்ணை எழுதுக.



Past Papers Wiki

09. பஸ் ஒன்றில் x எண்ணிக்கையான பயணிகள் இருந்தனர் அதிலிருந்து 2 பயணிகள் இறங்கிய பின் எஞ்சிய பயணிகளின் எண்ணிக்கையை அட்சரகணிதக் கோவையாக எழுதுக.

10. கீழே தரப்பட்ட கோவையின் பெறுமானங் காண்க.

$5^2 \times 2^2$

11. கீழே தரப்பட்ட இணைகரத்தின் சுற்றளவைக் காண்க.



12. 4kg 500g இருந்த மரக்கறியிலிருந்து பழுதடைந்தவற்றை ஒதுக்கிய பின் 1kg 750g எஞ்சியது. அவ்வாறு பழுதடைந்து ஒதுக்கிய மரக்கறியின் அளவு யாது?

13. சுருக்குக.

	l	ml
	7	000
−	1	650

14. சுருக்குக. $\frac{6}{7} - \frac{1}{7}$

15. 10 இலும் குறைந்த 3 இன் மடங்குகளை எழுதுக.

16. கீழே தரப்பட்ட கோணங்களில் செங்கோணத்தின் கீழ் கோடிடுக.

(i)  (ii)  (iii)  (iv) 

17. உருவில் நிழற்றப்பட்ட அளவை முழு அளவின் பின்னமாக எழுதுக.



18. 2^2, 3^2 ஆகிய சுட்டிகளில் பெரிய எண்ணைத் தெரிவு செய்க.

19.

ஹர்ஷ	☐ ☐ ☐
காசிம்	☐ ☐
ராஜு	☐ ☐ ☐ ☐
விமல்	☐ ☐ ☐

☐ = ரூபா 20 ஐ குறிக்கும்

கூடிய தொகையை வைத்திருப்பவர் யார்?

20. சுருக்குக. $162 \div 3$

பகுதி – II

முதலாம் வினா உட்பட எல்லமாக 5 வினர்களுக்கு விடை தருக

01. a. குறித்த பாடசாலையொன்றில் 6 ஆந் தரத்தில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

	6A	6B	6B
ஆண்கள்	24	33	20
பெண்கள்	20	22	20

i. ஆண்கள், பெண்களுக்கிடையிலான விகிதம் 1 : 1 ஆகக் காணப்படுவது எந்த வகுப்பிலாகும்? (1 புள்ளி)

ii. 6A வகுப்பில் ஆண், பெண் மாணவர்களுக்கிடையிலான விகிதத்தை எழுதி அதனை எளிய வடிவில் எழுதுக. (2 புள்ளிகள்)

iii. 6 A, 6B வகுப்புகளின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையிலான விகிதத்தை எழுதி அதனை எளிய வடிவில் தருக. (3 புள்ளிகள்)

iv. தரம் 6 இலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது? (1 புள்ளி)

b. மாதாந்த மின் சிட்டை தயாரிக்கும் போது நிலையான கட்டணமாக ரூபா 600 உம் அம்மாதத்தில் பாவிக்கப்படும் மின் அலகுக்கான கட்டணமும் சேர்த்து அறவிடப்படும்.

i. குறித்த வீடொன்றில் பாவித்த மின் அலகுகளுக்கான கட்டணம் x எனின், அவ்வீட்டின் மின் கட்டணத்திற்கான மொத்த தொகையை அட்சரகணிதக் கோவையாக எழுதுக. (2 புள்ளிகள்)

ii. அவ்வீட்டிற்கான கட்டணம் ரூபா 2800 ஆகும் போது x இன் பெறுமானம் யாது? (2 புள்ளிகள்)

c. கீழே தரப்பட்ட கூற்றுக்களில் குறிப்பிடப்படுபவை 'மாறி' அல்லது 'ஒருமை' என எழுதிக் காட்டுக.

i. தேன் கூடொன்றில் காணப்படும் தேன் பூச்சிகளின் எண்ணிக்கை.

ii. சதுரமொன்றின் பக்கங்களின் எண்ணிக்கை.

iii. 50g கடலையில் உள்ள கடலை விதைகளின் எண்ணிக்கை.

iv. மாணவனொருவனின் திணிவு.

v. எனது வீட்டிலிருந்து பாடசாலைக்கான தூரம். (5 புள்ளிகள்)

02. a. i. கீழே தரப்பட்ட பின்னங்களில் முறைமைப் பின்னங்களை எழுதுக. (2 புள்ளிகள்)

$$\frac{5}{6} \; , \; \frac{11}{8} \; , \; \frac{1}{9} \; , \; \frac{1}{15} \; , \; \frac{3}{4} \; , \; \frac{5}{8}$$

ii. சுருக்குக. $\frac{3}{8} + \frac{1}{4}$ (2 புள்ளிகள்)

iii. சுருக்குக. $\frac{2}{3} + \frac{4}{15}$ (3 புள்ளிகள்)

b. i. $\frac{75}{100}$ ஐ தசம எண்ணாக எழுதுக. (2 புள்ளிகள்)

ii. சுருக்குக. 11.39 – 9.8 (2 புள்ளிகள்)

Past Papers Wiki

03. வியாபார நிலையமொன்றில் 5 நாட்களில் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

நாள்	தேங்காய்களின் எண்ணிக்கை
திங்கள்	28
செவ்வாய்	14
புதன்	20
வியாழன்	31
வெள்ளி	13

i. ☐ = 4 தேங்காய்கள் குறிக்குமாறு படவரைபொன்றை வரைந்து காட்டுக. (6 புள்ளிகள்)

ii. இந்த 5 நாட்களில் விற்பனையான மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது? (1 புள்ளி)

iii. தேங்காயொன்றின் விலை ரூபா 130 எனின் அவ்வாரத்தில் தேங்காய் விற்பனையால் பெறப்பட்ட மொத்த இலாபம் யாது? (2 புள்ளிகள்)

iv. செவ்வாய்க்கிழமை விற்பனையான தேங்காய்களின் எண்ணிக்கையை வரவுக்குறி மூலம் காட்டுக. (2 புள்ளிகள்)

04. a. i. சிறிய சதுரமொன்றின் நீலம், அகலம் 1cmx1cm எனக் கொண்டு நிழற்றப்பட்டுள் ஒவ்வொரு உருவினதும் பரப்பளவுகளைக் காண்க. (6 புள்ளிகள்)



ii. a, c ஆகிய உருக்களின் சுற்றளவுகளைக் காண்க. (4 புள்ளிகள்)

iii. a, c ஆகிய உருக்களின் பரப்பளவுகள் தொடர்பாக உமது கருத்து யாது? (1 புள்ளி)

05. a. விமல் கடையொன்றுக்கு சென்று கீழே தரப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்த அளவு தரப்பட்டுள்ளது.

பொருட்கள்	கொள்ளவனவு செய்த அளவு kg/g
சீனி	1kg 250g
தேயிலை	250g
பருப்பு	1kg 500g
கருவாடு	1kg 50g
உருளைக் கிழங்கு	

i. விமல் கொள்வனவு செய்த பொருட்களின் மொத்தத் திணிவு யாது? (4 புள்ளிகள்)

ii. அப்பொருட்கள் அனைத்தையும் உறையொன்றினுள் இட்ட போது அதன் திணிவு 5kg 150g ஆக இருந்தது. உறையின் திணிவைக் காண்க. (2 புள்ளிகள்)

b. சுருக்குக.

(i)

	kg	g
	4	750
+	3	800

(ii)

	kg	g
	12	000
−	3	250

(3 புள்ளிகள்)

අ.පො.ස සාමාන්‍යපෙළ විභාග ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් පත්‍ර/සටහන් පිටු Past Papers Wiki අපේ පිවිසෙන්න

06. a. i. தளவுருக்கள் தொடர்பான அறிவைப் பயன்படுத்தி இவ்வுருக்களைப் பெயரிடுக.

a - .....

b - .....

c - .....

(3 புள்ளிகள்)



ii. உரு b இன் விஷேட இயல்பொன்றை எழுதுக. (1 புள்ளி)

iii. உங்களுக்குத் தெரிந்த 4 பக்கங்களும் சமனான தளவுருக்கள் இரண்டின் பெயர் தருக. (2 புள்ளிகள்)

b. i. சமபக்க முக்கோணிகளை மட்டும் கொண்டமைந்த திண்மமொன்றின் பெயர் தருக. (2 புள்ளிகள்)

ii. அத்திண்மத்தின் முகங்கள், உச்சிகள், விளிம்புகளின் எண்ணிக்கையை எழுதுக. (3 புள்ளிகள்)

07. a. கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது வலயங்களாக பிரிக்கப்பட்ட எண்ணொன்றாகும்.

வலயம்	எண்
ஆயிரம்	030
பில்லியன்	107
அலகு	214
மிலலியன்	009

i. அட்டவணையிலுள்ள வலயங்களை பொருத்தமான முறையில் பயன்படுத்தி உரிய எண்ணை நியம வடிவில் எழுதுக. (2 புள்ளிகள்)

ii. அவ்வெண்ணை சொற்களில் எழுதுக. (2 புள்ளிகள்)

iii. நீங்கள் எழுதிய எண்ணில்

i. 3 இன் இடப்பெறுமானம் யாது? (2 புள்ளிகள்)

ii. 9 இனால் குறிக்கப்படும் எண் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)

b. இங்கு தரப்பட்ட எண்களை பொருத்தமான முறையில் 3 குழுக்களாக வகைப்படுத்தி எழுதுக.

(2 புள்ளிகள்)



PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank